ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1868/54 - 2014 ජූනි මස 25 වැනි බදාදා - 2014.06.25

*1868/54 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு யூன் மாதம் 25 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் கீழ் மஹர பிரதேச சபையின் உப தவிசாளர் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

உப தவிசாளர், தவிசாளர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதன் காரணமாக மஹர பிரதேச சபையின் உப தவிசாளர் பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும் ;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) ஆம் பிரிவின் கீழ், வன்னி ஆரச்சிகே சுஸந்த சிரி என்னும் உப தவிசாளர் அங்கம் வகிக்கின்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உப தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான மஹர பிரதேச சபையின் உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் , அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக திரு. குலதுங்க ஆரச்சிகே தம்மிக ரொஷான் என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;

இப்போது மஹர பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் பதிராஜ ஆரச்சில்லாகே சுனில் சேனாரத்ன ஆகிய நான், 2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, திரு. குலதுங்க ஆரச்சிகே தம்மிக ரொஷான் என்பவர், மஹர பிரதேச சபையின் உப தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

பீ. ஏ. எஸ். சேனாரத்ன,
தெரிவத்தாட்சி அலுவலர்,
மஹர பிரதேச சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
கம்பஹா,
*2014, யூன் 24.*

*7 - 305*

இவ் அதிவிசேட வர்த்தமானியை *www.documents.gov.lk* எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.



2 - G 19787

**2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ், நல்லூர் பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

அனுமதிபெறாது மூன்றுமாத காலமொன்றுக்கு சபையின் கூட்டங்களுக்கு சமுகமளியாமை காரணமாக நல்லூர் பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவி, வெற்றிடமாகியுள்ளதாதலாலும் ;

பெரியதம்பி கனகசபாபதிப்பிள்ளை எனும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும் நல்லூர் பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர்குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65அ (2) என்னும் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. குமாரசாமி கதிர்காமநாதன் என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும் ;

இப்போது நல்லூர் பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் பொன்னுத்துரை குகநாதன் ஆகிய நான், 2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தி அமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, திரு. குமாரசாமி கதிர்காமநாதன் என்பவர், நல்லூர் பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

பொ. குகநாதன்,
தெரிவத்தாட்சி அலுவலர்,
நல்லூர் பிரதேச சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
2014, யூன் 24.

7 - 306

---

**2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ், போபெ - போத்தல பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

தென் மாகாணத்தின் மாகாண சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதன் காரணமாக போபெ - போத்தல பிரதேச சபையின் உறுப்பினரொருவரின்பதவி, வெற்றிடமாகியுள்ளதாதலாலும் ;

கமகே சானக சம்பத் மாதுகொட என்னும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும் போபெ- போத்தல பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர்குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65அ (2) என்னும் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. கயான் கிதிக தல்பே லியனகே என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும் ;

இப்போது போபெ- போத்தல பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் அந்தோனி பிமல் இந்திரஜித் த சில்வா ஆகிய நான், 2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தி அமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, திரு. கயான் கிதிக தல்பே லியனகே என்பவர், போபெ - போத்தல பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

ஏ. பி. ஐ. த சில்வா,
தெரிவத்தாட்சி அலுவலர்,
போபெ - போத்தல பிரதேச சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
காலி,
2014, யூன் 01.

7 - 307

**2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் கீழ் போபெ - போத்தல பிரதேச சபையின் தவிசாளர் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

தென் மாகாணத்தின் மாகாண சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதன் காரணமாக போபெ - போத்தல பிரதேச சபையின் தவிசாளரது பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும் ;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) ஆம் பிரிவின் கீழ், பிரதேச சபைத் தவிசாளரான, கமகே சானக கம்பத் மாதுகொட என்னும் தவிசாளர் அங்கம் வகிக்கின்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான போபெ - போத்தல பிரதேச சபையின் உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப் பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் , அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக உக்வத்தே சந்திம தேரர் என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;

இப்போது போபெ - போத்தல பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் அந்தோனி பிமல் இந்திரஜித் த சில்வா ஆகிய நான், 2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, உக்வத்தே சந்திம தேரர் என்பவர், போபெ- போத்தல பிரதேச சபையின் தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

ஏ. பி. ஐ. த சில்வா,
தெரிவத்தாட்சி அலுவலர்,
போபெ - போத்தல பிரதேச சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
காலி,
2014, யூன் 18.

7 - 308